கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 58 இதழ் : 03 ஜூன் 2023 விலை ரூ.25/-



வரலாற்றை
விடுதலை செய்தவர்
வாழட்டும் தமிழின்
வரலாறாக! – ம.ரா.

# உள்ளடக்கம்

**கட்டுரை**


சா.தேவதாஸ் 19
கவிதைக்காரன் இளங்கோ 31
மு.இராமசாமி 44
ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ்.ரமேஷ் 57
சிவக்குமார் முத்தய்யா 67


**சிறுகதை**


கலைஞர் மு.கருணாநிதி 06
ஸிந்துஜா 12
ஆயிஷா இரா.நடராசன் 23
வாசுதேவன் அருணாசலம் 40


**கவிதை**


ரகுநாத் வ 11
கிறிஸ்டினா ரோசெட்டி,
தமிழில்: வ.ஜெயதேவன் 18
பாபு கனிமகன் 22
காசாவயல் கண்ணன் 30
கி.சரஸ்வதி 39
உடுமலை கி.ராம்கணேஷ் 66
இரா.மதிராஜ் 66


**கடைசிப் பக்கம்**


இந்திரா பார்த்தசாரதி 69



சிறுகதை

வாசுதேவன் அருணாசலம்

# கதைய நிறுத்து! ஆளவிடு!

*பளாரென்று ஒரு அறை விட்டான் பாலாஜி அமலாவின் கன்னத்தில். அமலா அதிர்ந்துபோய் அங்கேயே உட்கார்ந்துவிட்டாள்.*

*[யாரு ஒங்களுக்கு இந்த அதிகாரத்தக் கொடுத்தது. ஆணுங்கிற ஆணவத்தில வந்ததா? இல்ல, பெண்ணுங்கிற எளக்காரத்தில வந்ததா? கை நீட்டுறவென்ல்லாம் நல்ல ஆம்பளயே கிடையாது. பெத்தவங்க நல்லா வளக்கலங்கிறதுதான் உண்மை. நாதாரிப்பய! எதுக்குக் கைநீட்டுறான். என்ன தப்புன்னாலும் இருந்துட்டுப் போகட்டும். கைநீட்டுறதா? மனைவின்னா என்ன வேணும்னாலும் பேசலாம்! என்ன வேணும்னாலும் செய்யலாம்! எவன் இந்த உரிமையைக் கொடுத்தது? நடு ரோட்டுல நிக்கவெச்சுச் சுடணும் இந்த மாதிரிப் பயலுகல!]*

*“ஏன் இவ்வளவு பிடிவாதம் பண்ணுறாருன்னு தெரியல. எவ்வளவோ சொல்லிட்டேன். கேட்க மாட்டேங்கிறாரு. நீயாவது சொல்லேன்” என்றான் பாலாஜி. “ஏங்க நீங்க சொல்லியே கேட்க மாட்டேனுறாருன்னா, நான் சொல்லியாக் கேட்கப்போறாரு!” என்று பதில் சொன்னாள் அமலா. “நீ எதுவும் அவர சொன்னியா?” என்று சட்டென்று அமலாவிடம் கேட்டான் பாலாஜி. “ ‘இங்க இருந்து எல்லாத்தையும் கஷ்டப்படுத்துறதவிட பேசாமா ஹோமிற்கே போயிடலாம்லேனு’ நான்தான் சொன்னேன்” என்ற பதில் அமலாவிடமிருந்து வரும் என்று பாலாஜி எதிர்பார்க்கவேயில்லை. “என்னடி சொல்லுற? நீதான் சொன்னியா! இதுல நீ தலையிடாத நான் பாத்துக்கிறேன்னு சொல்லியிருந்தேன்ல! அதுக்குள்ள என்ன அவசரம் உனக்கு! அவர வெளியேத்திட்டு நிம்மதியா நினைச்சத செஞ்சுகிட்டு அலையணும். அதுதான!” என்று குரலை சற்று உயர்த்தியே கோபப்பட்டான் பாலாஜி. ”உங்களுக்கு என்னங்க தெரியும்! இந்த மாதிரி ஆளலெல்லாம் வெச்சுக்கிட்டு...” என்று அமலா முடிக்கும்முன் பளாரென்று ஒரு அறை விட்டான் பாலாஜி.*

*[கொஞ்சம் யோசிக்க வேண்டியதுதான்! உங்க அப்பான்னா இப்படி ஹாஸ்டலுக்குப் போகட்டும்ணு விடுவியா? வயசானவங்கள வெச்சுப் பாக்கற பொறுமை ஆம்பளைக்கு இருக்கோ இல்லையோ! பெண்களுக்கு இப்பெல்லாம் சுத்தமாக போச்சு!*

அடிவிட்டாத்தான் சரிபட்டு வருகுதுக! ஒரு இமாஜினேஷன் கிடையாது. புருஷன் வேணும்! பிள்ளைக வேணும்!. ஆனா.. புருஷன் வீட்டு ஆட்கள் யாரும் ஆகாது! நல்லா இருக்கு! மிஞ்சிமிஞ்சிப் போனா நாக்குக்கு ருசியா என்னத்தையாவது எப்பவாது கேட்குங்க இந்தப் பெரிசுக!. அத செஞ்சு கொடுக்க என்ன கொள்ளையோ! "பளார்" .... சரிதானோ!]

"ஏங்க! உங்க அப்பாட்ட கொஞ்சம் சொல்லுங்களேன்! ப்ரீத்திய கொஞ்சவேண்டாம்னு. ப்ரீத்தி புலம்புறா! நாத்தம் குடல புடுங்குதுங்கிறா! டெய்லி குளிக்கிறது கிடையாது. உங்க அம்மா இறந்ததிலிருந்து குடியும் சிகரட்டும் அதிகமாயிடுச்சு! சாப்பாடு வெக்கலாம்னு அவர் ரூமுக்குப் போகவே பயமாயிருக்கு! எந்த கோலத்தில கெடக்காறோனு மனசு திக்குத் திக்குங்கிது! பெட்டுலேயே வாந்தியெடுத்து... நாத்தம் தாங்க முடியலைங்க!.. டாய்லெட்ட யூஸ் பண்ணிட்டு தண்ணி ஊத்துறதில்லீங்க.... யாரையாவது வேலைக்கு வெக்கலாம்ன்னா, யாரும் வரமாட்டாங்க. இந்த மாதிரிக் குடிச்சுப்போட்டு வந்து பண்ணறதயெல்லாம் சரிசெய்ய... எல்லாத்தையும் சுத்தம் பண்ணுறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடுதுங்க. கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்க!" என்று பாலாஜியிடம் கெஞ்சினாள் அமலா. பாலாஜி பதில் எதுவும் பேசவில்லை. "நான் ஒண்ணு சொன்னா கேட்பிங்களா? பேசாம... அவர எதாவது ஹோமிற்கு அனுப்பிடுங்க! அட்லீஸ்ட் கொஞ்ச நாளுக்காவது!" என்றாள் அமலா. "அவர்ட்ட நான் பேசுறேன். நீ எதுவும் அவர்கிட்ட சொல்லிக்கிட்டு இருக்காத!... என்ன புரிஞ்சுதா!" என்று சற்று அதட்டலாகவே சொன்னான் அமலாவிடம். அமலா பதில் எதுவும் சொல்லவில்லை. பாலாஜி அவன் அப்பாவிடம் இதைப்பற்றி பேசமாட்டான் என்று முடிவுசெய்துதான் அன்று பாலாஜியின் அப்பா இருக்கும் அறைக்குச் சாப்பாடு வைக்கச் சென்ற அமலா பாலாஜியின் அப்பாவிடம் வெளிப்படையாக அனைத்தையும் பேசி ஹோமிற்குச் செல்வதுதான் சரி என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டு வந்துவிட்டாள். அதைத்தான் பாலாஜி கேட்டபோது சொன்னாள். 'பளார்....' விழுந்தது.

[இப்படிபட்ட ஆள எப்படி சமாளிப்பது. குடிச்சுப்போட்டு வந்து வீட்ல அட்டூழியம் பண்ணா, என்னதான் செய்றது. என்னத்த அப்படி சொல்லிப்போட்டா அமலா! சரியாத்தான சொல்லியிருக்கா! ஹோமிற்குப் போனாவது அவர் திருந்த வாய்ப்பு இருக்கும். சுத்தமா இல்லேனாலும் பரவாயில்ல! இப்படி குடிச்சுப்போட்டு வந்து வாந்தி மூத்திரம்னு அசிங்கம் பண்ணி வெச்சா யாராலதான் பொறுத்துக்க முடியும். உங்க அப்பாதானே! நீ செய்யேன் எல்லாத்தையும். அப்ப தெரியும்! அவஸ்தையெல்லாம். கை நீட்டுறானா.. கை! அடிச்ச அந்தக் கைய ஒடிச்சா! ]

"ஏங்க உங்க வீட்டுல சரின்னு சொல்லிட்டாங்களா வர்ற வெள்ளிக்கிழமை பொண்ணு பாக்க எங்க அப்பா, என் அத்த பையன வரச் சொல்லிட்டாரு. அதுக்குள்ளயாவது உங்க வீட்டுல சொல்லி ஏதாவது பண்ணுங்களேன்" என்றாள் அமலா. "அப்பா! பிரச்சனையில்ல! அவரு சரிண்ணு சொல்லிட்டாரு! அம்மாதான்! அவுங்க அதச் சொல்லுவாங்க! இவுங்க இதச் சொல்லுவாங்கன்னு இழுத்துக்கிட்டு இருங்காங்க!" என்றான் பாலாஜி. "உங்க அப்பா ஓகே சொல்லிட்டாருங்களா?" என்று வியப்புடனே கேட்டாள் அமலா. "ம்... அவர் ஓகே சொல்லிட்டாரு! உனக்குப் பிடிச்சிருந்தா "கோ


அஹெட்"ன்னு என்னைக்கோ சொல்லிட்டாரு!" என்றான் பாலாஜி. "பெரிய மனுசங்க! பெரிய மனுசங்கதான்! ப்ராட் மைண்டடா இருக்காரு! இன்னும்போயிகிட்டு பிள்ளைகள கண்ட்ரோல் பண்ணுறது சரியில்லன்னு புரிஞ்சுகிட்டு சரியா சொல்லியிருக்காரு" என்று நன்னடைத்தைச் சான்றிதழ் வழங்கினாள் அமலா.

[அடிப்பாதகத்தி மகளே! நீ காதலிச்சவனையே கல்யாணம் பண்ண சரி சொன்ன மனுசன்தான் இன்னைக்கு உனக்கு ஆகாம போயிட்டாரா? மனசுல என்ன வேதனையோ! இப்படி நல்ல மனுசன் அவரு சம்சாரத்தோட நல்லபடியாத்தான் குடும்பம் நடத்தியிருப்பாரு! அந்த அம்மா இறந்துபோன வேதனையிலகூட இப்படி மாறியிருக்கலாம்ல! இப்படிப்பட்ட நல்ல மனுசனையா ஹோமிற்கு போகச் சொன்ன! "பளார்"... உனக்கு வேணும்தான்!]

"அமலா! நல்லா யோசிச்சுதான் சொல்லுறியா? பின்னாடி வருத்தப்படாதே! ஒன்னாலதான் ஒன் தங்கச்சிக்குக் கல்யாணமாகல! அது இதுன்னு என்னத்தையாவது சொல்லி அப்புறம் வருத்தப்படாதே! கொஞ்சம் வெயிட் பண்ணணும்னாலும் வெயிட் பண்ணுவோம்! அவசரப்பட வேணாம்!" என்று சற்று பொறுமையாகவே எடுத்துச் சொன்னான் பாலாஜி. "இல்லீங்க! எதுவும் சரிவராது. நான் உங்கள லூஸ் பண்ணத் தயாரா இல்லை. டைம் ஆக! ஆக! திங்ஸ் வில் நாட் கோ த வே வீ லைக். அங்க ஒங்க அம்மா. இங்க எங்க அப்பா! இது சரியா வராதுங்க! நீங்க ஒரு நாள ஃபிக்ஸ் பண்ணுங்க! நாம ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்குவோம். யார் வந்தாலும் சரி வராட்டியும் சரி!" என்று கூறிக்கொண்டே பாலாஜியின் தோளில் சாய்ந்தாள் அமலா.

[இப்படி எல்லாத்தையும் ஒனக்காக விட்டுட்டு வந்தவளையா கைநீட்டுன! ஒன்னையெல்லாம்!... விடு! கெட்ட வார்த்தை வருது! நம்பி வந்தவள கஷ்டப்படுத்துறதுதான் உங்களுக்கெல்லாம் கைவந்த கலையாச்சே! ஒரு நாதியும் இல்லாதவகிட்ட ஒங்க வீரத்த காட்டி ஒங்க ஆண்மையை நிரூபிச்சுக்குங்க! போங்கடாங்......!]

"ஏங்க! ப்ரீத்தி பிறந்தத ஒங்க அம்மாகிட்ட சொன்னீங்களா?" என்று கண்விழித்த சில நிமிடங்களில் கேட்டாள் அமலா. சிசரியன் அறுவை சிகிச்சையில்தான் ப்ரீத்தி பிறந்திருந்தாள். "அப்பாக்கிட்ட இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் பேசினேன். அம்மாட்ட சொல்லியருப்பாருன்னு நினைக்கிறேன்" பாதியாகக் கிழித்த வெள்ளை வேஷ்டி விரிக்கப்பட்டிருந்த மருத்துவமனையின் இரும்புப்பெட்டித் தொட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த ப்ரீத்தியைப் பார்த்துக்கொண்டே சொன்னான் பாலாஜி. மெல்ல கதவு தட்டப்படும் ஓசை கேட்க, பாலாஜி சென்று கதவைத் திறந்தான். அங்கே அவனுடைய அப்பா மட்டும் நின்று கொண்டிருந்தார். கதவை அகலமாகத் திறந்தான். பாலாஜியின் தந்தை உள்ளே வந்தார். நேராகத் தொட்டிலிருக்குமிடத்திற்குச் சென்றார். உறங்கிக்கொண்டிருந்த ப்ரீத்தியைப் பார்த்துக்கொண்டே நின்றார். தோளில் கிடந்த சிறிய துண்டை எடுத்து கண்களைத் துடைத்துக்கொண்டார். "ஒங்க அம்மா ஜாடையில வருவானு நினைக்கிறேன்" என்று தன் அருகில் நின்றுகொண்டிருந்த பாலாஜியிடம் கூறினார். "பெயின் அதிகமா இருந்தா டாக்டர்கிட்ட சொல்லு. இன்ஜங்ஷன் எதாவது போடுவாங்க. வலி இருக்காது" என்று அமலாவிடம் கூறினார். சில நிமிடங்களுக்குப்பின் சிறிய கைப்பையிலிருந்து இரண்டு ஐநூறு ரூபாய் கட்டுகளை எடுத்து பாலாஜியிடம்



கொடுத்தார். "இதெல்லாம் வேணாம்ப்பா! நான் சமாளிச்சுக்கிறேன்" என்றான் பாலாஜி. "ஒங்க அம்மாதான் கொடுத்துட்டு வரச் சொன்னா! அவளுக்கு வரணும்தான் ஆசை! வறட்டு பிடிவாதம். வறட்டு கௌரவம். ஏன் இப்படி இருக்காங்கன்னு தெரியல! என்னத்த கொண்டுகிட்டு போகப்போறோம்னு தெரியல!" என்று கூறிக்கொண்டே மீண்டும் அதே துண்டில் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

[இப்படிப்பட்ட மனுசனையா நீ ஹோமிற்குப் போகச் சொன்ன! ஒண்ணு நல்லது செஞ்சா உயிரையே கொடுக்கலாம்னுல அந்த அய்யன் சொல்லியிருக்காரு! எப்படி இப்படி சீக்கிரம் எல்லாத்தையம் மறக்கிறீங்கணுதான் தெரியல! கடைசி காலத்தில ஒனக்கு நல்ல கஞ்சி கிடைக்காது! எழுதி வைச்சுக்கோ! . . . ஒரு பளாரோட நிப்பாட்டிபுட்டானே! ]

"இப்படி புலம்புறதுக்கு, போயி பாத்துட்டு வந்திடலாம். போவோமா?" என்றார் பாலாஜியின் அப்பா. "இல்லீங்க! பாக்கணும்னுதான் தோணுது! இருந்தாலும், அவ்வளவு பேசிபோட்டு, இப்ப பல்ல இளிச்சிக்கிட்டு போகணுமானுதான் யோசிக்கிறேன்" என்றார் பாலாஜியின் அம்மா. "ஒரு வாரத்தில டிஸ்சார்ஜ் ஆயிடுவாங்களாம்! ஒண்ணு ஹாஸ்பிட்டல போயி பாத்திட்டு வந்திடுவோம். இல்லேனா, வீட்டுக்குப் போனதுக்கப்புறம் போயிட்டுக்கூட வந்திடலாம். எல்லாத்தையும் மனசல வச்சிகிட்டு புலம்பிக்கிட்டு இருக்கிறதவிட, பேசாம போயி பாத்துட்டு வந்திடுறதுதான் நல்லது. சொன்னா கேளு!" என்று பாலாஜியின் அப்பா பதில் சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில் வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டு பாலாஜியின் அப்பா வெளியே போனார். பாலாஜியின் அம்மா அவரைத் தொடர்ந்து சென்றார். காரிலிருந்து பாலாஜி வெளியே இறங்கினான். காரின் பின் கதவைத் திறந்தான். அமலா மெல்ல காரிலிருந்து வெளியே இறங்கினாள். கையில் ப்ரீத்தி. பாலாஜியின் அம்மா ஓடிச்சென்று அமலாவின் கையிலிருந்த ப்ரீத்தியை வாங்கிக்கொண்டாள். கண்ணீர் தாரைதாரையாக வடியத் தொடங்கியது. அமலாவை அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் சென்றாள். பாலாஜியின் அப்பா பாலாஜியின் கையைப் பிடித்துக் கொண்டார். "ரொம்ப சந்தோஷம்டா, பாலாஜி. இதை நீ செய்வேண்ணு நான் எதிர்பார்க்கவேயில்லடா!" என்றார். "நா ஒண்ணும் செய்யலப்பா! அமலாதான் அம்மாவ பாக்கணும்னு சொன்னா. அவுங்க கோவிச்சுக்கிட்டாலும் சரி, திட்டினாலும் சரி! ப்ரீத்திய அம்மாகிட்ட காட்டிட்டு போவோம்னு அவதான் சொன்னா!" என்றான் பாலாஜி.

[ராசாத்தி!... யாருக்கு இருக்கும் இவ்வளவு பெரிய மனசு. யாரு எப்படி வேணும்னாலும் நினைச்சுக்கிட்டும்னு, நம்ம நல்ல எண்ணத்தோட நடந்துக்குவோம்னு நினைச்சு சரியானத செஞ்ச, இந்த புள்ளைய கைநீட்டிப்புட்டானே! இவனை... ஒரு நிமிஷம்... என்னால முடியல... இப்படியே போனா பைத்தியந்தான் பிடிக்கும்! அறைஞ்சது சரியோ! தப்போ! ... கதைய நிறுத்து! ஆளவிடு!].

vasuaruntamil@gmail.com